**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு**

**O.S.No. 465/2019**

2026 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 9ம் தேதியன்று **PW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஷாஜிதா சாபிரா சியாத்அலி | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| தாலூக்கா | : | | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக என் கணவர் இறந்ததில் நான் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட கொண்டலாம்பட்டி சேலம் காவல் நிலைய குற்ற எண் 284/18 ன் முதல் தகவல் அறிக்கை **வாசாஆ 1**. என் கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கை புகைப்பட நகல் **வாசாஆ 2**. நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **வாசாஆ 3**. 1, 3, 4 பிரதிவாதிகள் பெற்று கொண்டதற்கான அஞ்சல ஒப்புதல் அட்டைகள் **வாசாஆ 4, வாசாஆ 5 , வாசாஆ 6**. 1, 3, 4 பிரதிவாதிகளின் பதில் அறிவிப்பு **வாசாஆ 7, வாசாஆ 8 வாசாஆ 9.** 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **வாசாஆ 10.** அதை அவர் பெற்று கொண்டதற்கான அஞ்சல ஒப்புதல் அட்டை **வாசாஆ 11**. 2ம் பிரதிவாதியின் பதில அறிவிப்பு **வாசாஆ 12**. 1 முதல் 3 வாதிகளான எங்களின்

ஆதார் அட்டை ( அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது ) **வாசாஆ 13, வாசாஆ 14, வாசாஆ 15**. 4 ம் பிரதிவாதியின் பிறப்பு சான்று **வாசாஆ 16**. என் கணவரின் இறப்பு சான்றிதழ் **வாசாஆ 17** (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது). என் கணவரின் வாரிசு சான்றிதழ் **வாசாஆ 18** (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது). என் கணவரின் ஆதார் அட்டை நகல் **வாசாஆ** 19 ( அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது ) ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.